# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1973/28 - 2016 ජුනි මස 29 වැනි බදාදා - 2016.06.29

*1973/28 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/ 78* (xii)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதான (2016, ஏப்பிறல் 26 ஆந் திகதிய 1964/11 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) 1996, மாச்சு 27 ஆந் திகதிய 916/7 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, அவ் அட்டவணையின் நிரல் I இல் காணப்படும் “பொறியியல் பீடம்” என்னும் விடயத்தினையும் அதன் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளையும் உடனடுத்துப் பின்வரும் விடயம் மற்றும் பதிவுகளை சேர்ப்பதன் மூலம் திருத்துகின்றேன் :-*

| “நிரல் I | நிரல் II |
|---|---|
| “தொழில்நுட்பவியல் பீடம் | உயிரியல் முறைமைகள் தொழில்நுட்பவியல் துறை<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறை”. |

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
2016, யூன் 27.

7- 635




இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.